**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS. 384/2022

2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 04-ம் நாள் சனிக் கிழமை PW1-ன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சிய சட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S. மும்தாஜ், B.Sc., B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 04.01.2025 | தந்தை பெயர்: | |
| பெயர்: | விஜயா (PW1) | தாலுக்கா: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தொழில்: | | வயது : | |

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் 2 ம் வாதியின் மனைவி ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை நிரூபணபிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். நிரூபணபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன்.

1) 03.10.1989 என் மாமனார் மற்றும் அவர் குடும்பத்தாரிடையே ஏற்பட்ட பாகப்பத்திரம் சார்பதிவக நகல் வா.சா.ஆ.1 ஆகவும்
2) என் மாமனார் பெயரில் உள்ள 05.06.2018 ல் ஏற்பட்ட கணிணி சிட்டா வா.சா.ஆ.2 ஆகவும்
3) 04.05.2018 ம் தேதியிட்ட நாளிதழ் விளம்பரம் வா.சா.ஆ.3 ஆகவும்
4) 28.05.2018 ம் தேதியிட்ட 5 ம் பிரதிவாதிக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.4 ஆகவும் குறியீடுசெய்யப்படுகிறது.

**முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**